www.Padasalai.Net V7T **விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்** www.TrbTnpsc.com

**தொகுத்தறித் தேர்வு - 2023**

- - - - -

**வகுப்பு 7**

கால அளவு: 2.00 மணிநேரம் **தமிழ்** மதிப்பெண்கள்: 60

**பகுதி - 1**

**10×1=10**

**அனைத்து வினாக்களுக்கும் விடை அளிக்க.**

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1) செல்வத்தின் பயன் ........... வாழ்வு.

அ) ஆடம்பர ஆ) நீண்ட இ) ஒப்புரவு ஈ) நோயற்ற

2) திருநெல்வேலி ............. ஆற்றின் கரையில் அமைந்துள்ளது.

அ) காவிரி ஆ) வைகை இ) தென்பண்ணை ஈ) தாமிரபரணி

3) காயிதே மில்லத் ............ பண்பிற்கு உதாரணமாகத் திகழ்ந்தார்.

அ) தண்மை ஆ) எளிமை இ) ஆடம்பரம் ஈ) பெருமை

4) நாடென்ப - என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..........

அ) நான் + என்ப ஆ) நா + டென்ப இ) நாடு + என்ப ஈ) நாடு + டென்ப

**ஆ) பொருள் தருக.**

5) சீலை

6) இரக்கம்

**இ) பொருத்துக.**

7) தரணி - நெய்

8) ஆர்வம் - பாய்ச்சுதல்

9) திரிகூடமலை - உலகம்

10) நீர் - குற்றாலம்

**பகுதி - 2**

**ஈ) ஓரிரு சொற்களில் விடையளிக்க. (ஏதேனும் ஐந்து வினாக்கள் மட்டும்)** **5×2=10**

11) பாரி மகளிரின் பெயர்களை எழுதுக.

12) தாமிரபரணி ஆற்றின் கிளை ஆறுகள் யாவை?

13) இரட்டைக் கிளவி என்பது யாது? சான்று தருக.

14) காக்கை ஏன் குயில் குஞ்சைப் போகச் சொன்னது?

15) பொருளீட்டுவதை விடவும் பெரிய செயல் எது?

16) உருவக அணியை விளக்குக.

17) சிறந்த நாட்டின் இயல்புகளாக வள்ளுவர் கூறுவன யாவை?

**உ) ஓரிரு தொடர்களில் விடை தருக. (ஏதேனும் மூன்று வினாக்கள் மட்டும்)** **3×4=12**

18) சாந்தம் பற்றி இயேசுகாவியம் கூறுவன யாவை?

19) ஆட்சிமொழி பற்றிய காயிதே மில்லத்தின் கருத்தை விளக்குக.

20) இரட்டைக்கிளவி, அடுக்குத் தொடர் - ஒப்பிடுக.

21) உழவுத்தொழிலில் காலந்தோறும் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் பற்றி எழுதுக.

22) ஒப்புரவுக்கும் உதவிசெய்தலுக்கும் உள்ள வேறுபாடு யாது?

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பகுதி - 3

இ) ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி. 5×2=10

23) கலைச்சொல் அறிக.

அ) Wealth ஆ) Poet

24) கீழ்க்காணும் தலைப்புகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கவிதை எழுதுக.

அ) அன்பு ஆ) தன்னம்பிக்கை

25) தலைப்புச் செய்திகளை முழுச்சொற்றொடர்களாக எழுதுக.

அ) தேசிய அளவிலான கைப்பந்துப்போட்டி ............ தமிழக அணி வெற்றி.

ஆ) மாநில அளவிலான பேச்சுப்போட்டி .......... சென்னையில் இன்று தொடக்கம்.

26) கொடுக்கப்பட்டுள்ள ஊரின் பெயர்களில் இருந்து புதிய சொற்களை உருவாக்குக

அ) செங்கல்பட்டு ஆ) பட்டுக்கோட்டை

27) தொடருக்குப் பொருத்தமான உவமையை எடுத்து எழுதுக.

அ) திருவள்ளுவரின் புகழை ........... உலகமே அறிந்துள்ளது.

(எலியும் பூனையும் / உள்ளங்கை நெல்லிக்கனி போல)

ஆ) அப்துல் கலாமின் புகழ் ........... உலகெங்கும் பரவியது.

(குன்றின் மேலிட்ட விளக்கு போல / குடத்துள் இட்ட விளக்கு போல)

28) சரியான வினாச் சொல்லை இட்டு நிரப்புக.

அ) முதல் ஆழ்வார்கள் ............... பேர்?

ஆ) அறநெறிச்சாரம் என்பதன் பொருள் ..........?

29) உன் பொறுப்புகள் இரண்டு எழுதுக.

## பகுதி - 4

எ) அடிபிறழாமல் எழுதுக 4+2=6

30) 'வையம்' - எனத் தொடங்கும் புதுமை விளக்கு பாடலை அடிபிறழாமல் எழுதுக.

31) 'உறுபசியும்' - எனத் தொடங்கும் குறளை எழுதுக.

## பகுதி - 5

ஏ) ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி 1×6=6

32) பயணம் கதையைச் சுருக்கி எழுதுக.

33) உண்மை ஒளி படக்கதையைக் கதையாகச் சுருக்கி எழுதுக.

## பகுதி - 6

ஐ) ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி 1×6=6

34) உங்கள் ஊரில் நடைபெறும் திருவிழாவைக் காண வருமாறு அழைப்பு விடுத்து உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

35) என்னைக் கவர்ந்த நூல் - கட்டுரை எழுதுக.

\- - - - - -

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com